Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No S.T.C.NO.935/2022
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.2,   Page.No.104/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலாஜி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ஜீவரத்தினம் | தொழில் | வங்கி மேலாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 10th day of August 2023.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-** (எதிரி டேனியல் ஆஜரில் உள்ளார்)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் எச்.டி.எப்.சி வங்கி திருப்பத்துர் கிளையில் வங்கி மேலாளராக பணி செய்து வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து சம்மன் கிடைக்கபெற்றதால் தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். புகார்தாரர் ரமேஷ் என்பவர் எங்கள் வங்கியில் கணக்கு எண் 50100209947057 என்ற சேமிப்பு கணக்கு வைத்துள்ளார். அந்த வங்கி கணக்கில் 21.08.2022 தேதியில் ரூ.5,90,000/–க்கான யூனியன் வங்கி 20.08.2022 தேதியிட்ட காசோலை எண் 13133 என்ற காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தார். அந்த காசோலைக்குண்டான வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதற்காக கசோலையை 22.08.2022 அன்று திருப்பப்பட்டது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பு.த.சா.ஆ.2 ரிட்டன் மெமோ ஆனது மேற்கண்ட காரணத்திற்காக எங்கள் வங்கியில் வழங்கப்பட்டதுதான்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

20.08.2022 ல் தேதியிட்ட காசோலை என்பதற்கு நான் தற்போது ஆவணங்கள் ஏதேனும் கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தால் யாருடைய பெயரில் கொடுக்கப்பட்டுள்ளதோ அவர்களது வங்கி கணக்கு எங்கள் வங்கியில் உள்ளதாக என்றும், அந்த கணக்கு செயல்பாட்டில் உள்ளதா என்றும்,

காசோலை அதற்குண்டான கால அவகாசத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பதை எல்லாம் சரிபார்ப்போம். தாக்கல் செய்யப்பட்ட காசோலையின் உரிமையாளர் எங்கள் வங்கியில் கணக்கு எதுவும் வைக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் இந்த வழக்கின் காசோலையை மேற்கண்டவாறு சரிபர்த்தற்கு எந்த குறிப்பும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:** இல்லை

Signature of Witness.